# தூதன்

தூதன் 35 | ஜனவரி 2026 | தூது 1

உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! சங் 31:19




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை - தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 01 |
| ஆயரம்மா மடல் | 05 |
| ∴புஜைரா போதகர் மடல் | 07 |
| ஆயரம்மா மடல் - ∴புஜைரா | 11 |
| இராஸ் அல் கைமா - போதகர் மடல் | 14 |
| ஆயரம்மா மடல் - இராஸ் அல் கைமா | 17 |
| செயலர் மடல் | 19 |
| நீங்கள் கிறிஸ்தவரா! | 21 |
| திருச்சபை ஜெபநாள் | 22 |
| வேதவினா போட்டி | 25 |
| தெரிந்துகொள்வோம் | 28 |
| Health Tips | 30 |
| தமிழ் வேதவகுப்பு - சிறுவர் பகுதி | 32 |
| Children's Corner | 34 |
| Birthday Celebrants | 40 |
| Wedding Anniversary | 44 |
| ஆராதனைப் பாடல்கள் | 46 |
| Eli | 47 |



P.O.Box: 8785, Dubai. Mob: 050-5533645
Email: office@csitamilparishdubai.com - Website: www.csitamilparishdubai.com

# சபை போதகர் மடல்

அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் திருச்சபை மக்கள் யாவருக்கும் எனது அன்பான புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த வருடம் முழுவதும் நம்மை பாதுகாத்து வழிநடத்தி வந்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம். எல்லா சூழ்நிலைகளிலும் ஆண்டவர் நம்மோடிருந்தார். குடும்பங்களையும் ஊழியங்களையும் ஆசீப்வதித்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஆண்டவர் தாமே நம்மோடிருந்து இப்புதிய ஆண்டிலும் நம் திருச்சபையின் ஊழியங்களையும், நம் குடும்பங்களையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.

ஃபுஜைரா, மற்றும் இராஸ் அல் கைமா சபைகளின் ஆயர்கள், நமது சபை நிர்வாகஸ்தர்கள், EC அங்கத்தினர்கள் மற்றும் அனைத்து ஊழிய பொருப்பாளர்களையும் அன்புடன் வாழ்த்துகிறேன். இப்புதிய ஆண்டில் நாம் எதிர் நோக்கியுள்ள ஊழியங்கள் மற்றும் சபை வளர்ச்சிப் பணிகளை ஆண்டவர் ஆசீர்வதித்து தருவாராக. இப்புதிய மாதமும் நம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைய கிருபை செய்வாராக.

இவ்வாண்டின் வாக்குத்தத்த வசனத்தை தியானிப்போம்.

**உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும்,**
**நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீப்வதிப்பார்.**
உபாகமம் 15:10

LORD your God will bless you in all your work
and in everything you put your hand to. Deuteronomy 15:10

ரயில் நிலையம் ஒன்றில் சிறுவன் ஒருவன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் பணக்காரர் ஒருவர் அவ்வழியாக வந்தார். அவரிடம் கேட்டால் நிறைய கிடைக்கும் என்று நினைத்து அவரிடம் பிச்சை கேட்டான் சிறுவன். ஆனால் அவர் பிச்சை கொடுக்கவில்லை. அவர் சிறுவனிடம், “நான் ஒரு Business man, என்னிடம் பொருள் தருபவர்களுக்கு நான் பணம் தருகிறேன். நீயும் ஏதாவது தந்தால் உனக்கும் பணம் தருகிறேன். நீ எனக்கு என்ன தரப் போகிறாய்” என்று கேட்டார். தருவதற்கு என்னிடம் எதுவுமில்லை என்றான் சிறுவன். அப்படியானால் இதுவரை நீ யாருக்கும் எதுவும் கொடுத்ததில்லையா? என்று கேட்டுவிட்டு கடந்து சென்றார் பணக்காரர். அவர் கேட்ட கேள்வி சிறுவனை மிகவும் பாதித்தது. என்ன செய்யலாம் என்று யோசித்தான். ரயில் நிலையம் அருகே ஒரு பெரிய இடம் இருந்தது. அதிலே பல செடிகளில் பூக்கள் பூத்து குலுங்கினது. அங்குள்ள பூக்களை பறித்து வந்து தினமும் தனக்கு பிச்சை தருபவர்களுக்கு கொடுக்க ஆரம்பித்தான். இப்போது முன்பைவிட அதிகமாக பணம் கிடைத்தது. அந்த இடத்தில் பூக்கள் இல்லாத நாட்களில் கூட வெளியே காசு கொடுத்து பூக்களை வாங்கி கொடுக்க ஆரம்பித்தான்.

சில மாதங்களுக்குப்பின் அதே பணக்காரர் அவ்வழியாக வந்தார். சிறுவன் ஓடிச்சென்று அவரிடம் சென்று இப்போது தருவதற்கு என்னிடம் உள்ளது என்று சொல்லி பூக்களை கொடுத்தான். அவர் மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு அவனுக்கு நிறைய பணம் கொடுத்துவிட்டு இப்போது நீயும் என்னைப் போல ஒரு Business man தான் என்று சொல்லிவிட்டு சென்றார். அந்த வார்த்தை அவனுக்கு உற்சாகம் தந்தது. பூக்களை வாங்கி விற்க ஆரம்பிக்கிறான். பின் நாட்களில் ஒரு சிறந்த Business man ஆக மாறுகிறான்.

ஆம். அன்பானவர்களே! நம்முடைய வாழ்விலும் கூட நம்மை குறித்த நம் எண்ணங்கள் சிறந்தவைகளாக இருக்க வேண்டும். இதை நாம் self - confidence என்று சொல்கிறோம். Self - Confidence is not arrogance or pretending you have no fear. It is the quite assurance "with God's help, I can face this." பவுல் அப்போஸ்தலர் பிலிப்பியர் 4:13 ல் சொல்கிறார் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." நல்ல நம்பிக்கையுடன் இறைவனைப் பற்றி முயற்சி செய்பவர்களுக்கு இறைவனும் துணை நிற்கிறார். நம்முடைய வாக்குத்தத்த வசனம் சொல்கிறது. உன் தேவனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கிரியைகளிலும், நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார் (உபாகமம் 15:10). நாம் புதிய ஒரு ஆண்டிற்குள் பிரவேசிக்கிறோம். நம் எல்லாருடைய விருப்பமும், ஜெபமும் "ஆண்டவரே, இவ்வாண்டை ஆசீர்வதித்து தாரும்." - "Lord, Bless this year." என்பதுதான். நாம் விரும்புவது, இந்த ஆண்டில் நமக்கு நல்ல சுகம் வேண்டும், சமாதானம் வேண்டும், தேவைகள் சந்திக்கப்பட வேண்டும், ஒரு வளர்ச்சி வேண்டும், பாதுகாப்பு வேண்டும் என்பதுதான். ஆம். நமது ஆண்டவர் ஆசீர்வதிக்கும் தேவன் தான். ஆனால் ஆண்டவர் அருளும் ஆசீர்வாதங்கள் குறுகிய சில வட்டத்திற்கள் நின்று விடுவதில்லை. எனவே நம்மை ஆசீர்வதிக்கும் தேவன் எப்படிப்பட்டவர். அவர் தரும் ஆசீர்வாதங்கள் எப்படிப்பட்டது என்பதை தியானிக்கலாம்.

முதலாவது...

**1. புதிய துவக்கம் தரும் ஆண்டவர். God Gives New Beginning.**

உபாகமம் 15:1 "ஏழாம் வருஷத்தின் முடிவிலே விடுதலை பண்ணுவாயாக."

Deuteronomy 15:1 "At the end of every seven years you must cancel debts"

இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஆண்டவர் தரும் அன்பு கட்டளைகளுள் ஒன்று "விடுதலையின் ஆண்டை" (Year of Release) கடைபிடிப்பதாகும். இந்த விடுதலையின் ஆண்டிலே சகோதரனோ அல்லது மற்றவர்களோ வாங்கிய கடன்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். ஏழாவது ஆண்டிலே அடிமைகள் விடுதலை செய்யப்பட வேண்டும் (உபா15:12). ஐம்பதாவது ஆண்டு யூபிலி ஆண்டு (Year of Jubilee) எனப்படும் (லேவி:25:12). யூபிலி ஆண்டிலே வாங்கப்பட்ட நிலமோ அல்லது வீடுகளோ விடுதலை செய்யப்பட வேண்டும்.

இந்த விடுதலை ஆண்டின் மூலம் எளிய மக்கள்மீது ஆண்டவர் கொண்ட அன்பும், நமது ஆண்டவர் ஒருபோதும் தமது ஜனங் அடிமைத்தன வாழ்வை விரும்பாதவர் என்பதும் தெரிகிறது. கடன்களிலிருந்தம், அடிமைத்தனத்திலிருந்தும் ஆண்டவர் தரும் விடுதலை புதிய ஒரு துவக்கத்தை எல்லாருக்கும் வாக்குப்பண்ணுகிறது. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் தமது ஊழிய நோக்கத்தை ஜனங்களுக்கு வெளிப்படுத்தும் போது லூக்கா 4:18,19ல் கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்: தரித்திரருக்கு சுவிஷேசத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்: இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைபட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும், பிரசித்தப்படுத்துவும், நொருங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார் என்று அறிவிக்கிறார். ஆம். அன்பானவர்களே, நமது ஆண்டவர் எளிய தமது ஜனங்களை நேசிக்கிறவர். நாம் தோல்வியுற்றோ, சோர்ந்து போன நிலைமையியோ, கடன்களுக்கு மத்தியிலோ அல்லது உடைந்த உள்ளத்தோடோ இருப்பதை விரும்பாதவர். புதிய துவக்கத்தை நமக்குத் தருபவர். எனவே பவுல் அப்போஸ்தலர் சொல்வது போல் "பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி.." (பிலி: 3:13) புத்துணர்வுடன் இப்புதிய ஆண்டுக்குள்பிரவேசிப்போம்.

இரண்டாவதாக...

### 2. ஏழ்மையை மாற்றும் ஆண்டவர். God Removes Poverty.

உபா.15:4 "எளியவன் உனக்குள் இல்லாதிருக்கும்படி இப்படிச் செய்ய வேண்டும்."
Deuteronomy 15:4 "There need be no poor people among you"

விடுதலையை வாக்களித்து வாழ்வின் தரத்தை உயர்த்தும் ஆண்டவர் தமது ஜனங்களின் ஏழ்மையை மாற்றும்படி அனைவரையும் ஆசிர்வதிக்கிறார். நீ கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் உன்னை ஆசீர்வதிப்பார் என்று வாக்குக் கொடுக்கும் ஆண்டவர் நாமும் எளியவர்களுக்கு தாராளமாக கொடுக்க வேண்டும் என்று கற்றுக் கொடுக்கிறார். உபா 15:8 ல் "அவனுக்கு உன் கையை தாராளமாய்த் திறந்து அவனுக்கு அவசரத்தினிமித்தம் அவனுக்குத் தேவையானதை கடன் கொடுப்பாயாக." என்று கூறுகிறார். நாம் புரிந்து கொள்ள வேண்டியது "God's blessing is communal, not merely individual" என்பதுதான். எலலாரையும் ஆசீர்வதிக்கும் ஆண்டவர் மற்றவர்களுக்கு ஆசீர்வாதம் பெரும்படி நம்மை கருவியாக பயன்படுத்துகிறார். ஆபிரகாமை அழைத்த ஆண்டவர் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குத்தத்தம் "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாயிருப்பாய்" (ஆதி 12:2) என்பதாகும். எனவே, ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்கும்படி நாம் மற்றவர்களுக்கு தாராளமாய் உதவி செய்ய முன்வர வேண்டும். God blesses us not just to raise our standard of living, but our standard of giving.

மூன்றாவதாக...

### 3. இருதய கடினத்தை மாற்றும் ஆண்டவர். God Changes the Hardened Heart.

உபா15:7 "எளியவனாகிய உன் சகோதரனுக்கு உன் இருதயத்தை நீ கடினமாக்காமலும்..." Deuteronomy 15:7 "Do not be hard-hearted"

இரக்கத்தில் ஐசுவரியமுள்ள ஆண்டவர் நாமும் மற்றவர்களுக்கு இரங்க வேண்டும் என்று கற்றுக் கொடுக்கிறார். "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்: அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்" (நீதி 19:17) என்று வாசிக்கிறோம். "நீங்கள் எல்லாவற்றிலும் சம்பூரணமுடையவர்களாயும் சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயிருக்கும்படியாக தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்" என்று பவுல் அப்போஸ்தலர் சொல்கிறார். நீங்கள் தேவ கிருபை பெற்றவர்கள். ஆகையால் மற்றவர்களுக்கு இரங்குங்கள் என்று கற்றுக்கொடுக்கிறார். லூக்கா 10: 27ல் "உன்னிடத்தில் அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக" என்று சொல்லும் ஆண்டவர் நல்ல சமாரியனை நமக்கு முன் உதாரணப்படுத்துகிறார். நல்ல சமாரியனாக வாழ்ந்தும் காண்பித்திருக்கிறார். எனவே, நமது கடின இருதயங்கள் மாறுவதற்கு நாம் நம்மை அர்ப்பணிப்போம். பகை, வைராக்கியம், கோபம் இவைகளை விட்டுவிட்டு புதிய ஆண்டுக்குள் புதிதாக்கப்பட்டவர்களாய் கடந்து செல்வோம். "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் பதிதாயின." (2 கொரி: 5:17) என்ற வசனத்தின் படி புதிதாக்கப்பட்டவர்களாய் வாழ்ந்து காண்பிப்போம்.

நிறைவாக...

ஆம். அன்பானவர்களே, ஆண்டவர் அந்த ஆண்டை நமக்கு ஒரு ஆசீர்வாதமான ஆண்டாக தருகிறார். நாம் கையிட்டுச் செய்யும் எல்லாக் காரியங்களிலும் நம்மை ஆசீர்வதிப்பார். அந்த ஆசீர்வாதங்களை பெற நம்பிக்கையுடன் முயற்சி செய்வோம். நம் பாடுகள், வேதனைகள், போராட்டங்களிலிருந்து நமக்கு விடுதலை தந்து, புதிய ஒரு துவக்கத்தை நம் வாழ்வில் வாக்குப்பண்ணுகிறார். அதை சுதந்தரித்துக் கொள்ள நாமும் மற்றவர்கள் முன்னேற உதவுவோம், இருதய கடினங்களை மாற்றி தேவ அன்பை வெளிப்படுத்துவோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.




கிறிஸ்துவின் பணியில்
Rev.K.சுதாகர்.
சபை போதகர்/தலைவர்.

## இறைவனிடம் நன்மை பெற்ற இல்லத்தரசிகள்

அண்ட சராசரங்களையும் படைத்தத் தேவனாலே கருத்துடனும் கரிசனையுடனும் படைக்கப்பட்ட முதல் பெண்தான் ஏவாள். அவசரப் புத்திக்கு அடிமையாகுதல் பெண்ணின் பலவீனம் எனவும், அதுவும் ஏவாளின் சுபாவம் எனவும் நாம் சொல்லக் கேட்டிருக்கலாம். எந்த சூழ்நிலையில் நாம் இருந்தாலும், எதில் தவறியிருந்தாலும் ஸ்திரீயின் வித்தான கிறிஸ்துவினால் உண்டான மீட்பு நமக்கு ஜெயமளிக்கும் என்பதே ஏவாளின் வாழ்க்கைச் சரித்திரத்தின் மூலம் பெண்களாகிய நமக்குக் கிடைக்கும் பெரிய நம்பிக்கை.

**ஏவாள்:** ஏவாள் என்றால் "ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய்" என்று அர்த்தம். ஏவாள் இவ்வுலகில் வாழ்ந்த முதல் பெண். ஏவாள் பிறந்தவள் அல்ல. தேவனால் படைக்கப்பட்டவள். ஏவாள் படைக்கப்பட்ட விதமே வித்தியாசமானது, விந்தையானது. சர்வலோக சிருஷ்டிகர் அவளைக் கருத்தாக, கலையாக ஒரு நோக்கத்தோடு சிருஷ்டித்தார். முதல் மனிதன் ஆதாமுக்கு சராசரமெங்கும் ஏற்ற துணை இல்லை என்று பரம தகப்பன் கண்டு, அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்கிடத் தீர்மானித்தார். மண்ணினால் உருவாக்கி தன் சுவாசத்தையேக் கொடுத்த மனிதனுக்கு அயர்ந்த நித்திரை வரப்பண்ணி. அவன் விலாவிலிருந்து ஒரு எலும்பை எடுத்து அதை மனுஷியாக உருவாக்கினார்.

### 1. நன்றாக படைக்கப்பட்டாள்:

ஏவாள் ஒரு நோக்கத்தோடு உருவாக்கப்பட்டவள். அவள் பிறந்தவள் அல்ல, ஆதாமின் தேவைக்காக ஒரு துணை வேண்டுமென்று எண்ணி தேவனால் படைக்கப்பட்ட அற்புத பிறவி தான் ஏவாள். ஏவாள் - ஆதாம் தம்பதியினருக்காகவே அந்த ஏதேன் தோட்டத்திலுள்ள செடிகளும், மரங்களும், கனிகளும், மிருக ஜீவன்கள் அனைத்தும் படைக்கப்பட்டது. அனைத்தின்மீதும் அவர்கள் அதிகாரம் செலுத்த உரிமை வழங்கப்பட்டது. (ஆதி. 1:26, 27) தேவன் ஆதாமையும், ஏவாளையும் தமது சாயலாக சிருஷ்டிந்து அவர்கள் சகல மிருக ஜீவன்களையும், பூமியின் மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். அனைத்தையும் படைத்த கடவுள் மனுஷர்களை மாத்திரமே தமது சாயலாக படைத்திருந்தார். உலகில் முதன்முதலாக எவருமே பெற்றிராத ஒரு ஆசீர்வாதம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் அதை அவர்கள் சரிவர பயன்படுத்திகொள்ளவில்லை. ஏவாள் எலும்பினால் உருவாக்கப்பட்டவளானாலும் நேர்த்தியாக படைக்கப்பட்டாள்.

### 2. நன்மை பெற்றாள்:-

மனித வாழ்வில் உணவு, உறைவிடம் என்பது மிகவும் முக்கியமானது. அதை தேவன் ஏவாளுக்கு நிறைவாகவே கொடுத்திருந்தார். எந்த வேலையுமே செய்யாமல் தேவன் அவர்களின் உணவு தேவைகளை பூர்த்தி செய்தார். "என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவார்கள்" என்ற வசனத்திற்கேற்ப ஆசீர்வதித்திருந்தார். ஆனாலும் திருப்தியில்லாத மங்கையாகிப் போனாள். தேவன் அந்த தோட்டத்தில் விலக்கி வைத்திருந்த விருட்சத்தின் கனியை மட்டும் புசிக்கக்கூடாதென்ற கட்டளையையும் மீறி சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்பட்டவளாய் அந்த கனியையும் புசித்து தன் கணவனுக்கும் கொடுத்து வாழ்க்கையை கெடுத்துக் கொண்டாள். கடவுள் செய்திருந்த நன்மையை நினைத்துப் பார்க்க தவறிவிட்டாள். வாழ்க்கையில் இறைவனிடம் எத்தனை நன்மைகள் பெற்றிருந்தாலும் சில நேரங்களில் அதை நினைத்து நன்றி செலுத்த தவறுகிறோம்.

### 3. நம்பிக்கையின் அடையாளமானாள் (symbol of hope)

ஏவாள் கனியைப் புசித்ததின் நிமித்தம் அதற்கான தண்டனையைப் பெற்று தோட்டத்தை விட்டு விரட்டப்படுகிறாள். அவருக்கு தண்டனையாக பிரசவ வேதனைக் கொடுக்கப்பட்டது. அதற்காக. அவள் முறுமுறுக்கவில்லை. வேதனையோடு ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தபோது "கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன்" என்று மகிழ்ச்சியோடு சொன்னாள். முறுமுறுப்பில்லாத வாழ்வு ஆசீர்வாதத்திற்கு அடிப்படை. அவள் செய்த தவறோடு அவள் வாழ்வு முடிந்து விட வில்லை. அவள் மூலமாகத் தான் ஒரு குழந்தை இந்த உலகில் பிறந்தது என்ற பெருமை ஏவளுக்கு உண்டு. அதனால்தான் "ஜீவனுள்ளோருக் கெல்லாம் தாய்" என்ற பெயர் இன்றளவும் அவளுக்கு இருக்கிறது. அவள் வாழ்வு ஒரு நம்பிக்கையின் அடையாளம். நமக்கு பல தோல்விகள் நம்மைச் சூழ்ந்து வரும்போது துவண்டுவிடாமல், அதிலிருந்து ஒரு புதிய துவக்கத்தை தொடங்க வேண்டும். ஏவாளைப்போல நாமும் நம் வாழ்வில் நம்பிக்கையின் அடையாளமாக வேண்டும்.

இறைவன் எப்பொழுதும் நமக்கு நன்மைகளையே அருளுகிறார். ஏவாளுடைய வாழ்வில் தேவன் ஏவாளை நன்றாகவே படைத்து, நன்மைகளையே தந்து ஆசீர்வதித்தார். விலக்கப்பட்ட கனியை புசித்து கீழ்ப்படியாமையின் தண்டனையைப் பெற்ற ஏவாளுடைய வாழ்க்கையையும் தோல்வியின் அடையாளமாக அல்ல அவள் மூலம் இரட்சிப்பின் திட்டத்தை பூர்த்தி செய்து நம்பிக்கையின் அடையாளமாக அவளை உயர்த்தினார். இதன் மூலம் ஆண்டவர் எந்த சூழ்நிலையிலும் நமக்கு நன்மையையே தருவார் என்ற நம்பிக்கை நமக்கு கிடைக்கிறது. நாமும் அந்த நல்ல ஆண்டவரின் மீது நம்பிக்கையை வைப்போம். ஆண்டவர் நன்மையானதைத் தருவார். ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி. ஸ்மைலி சுதாகர்
ஆயரம்மா, துபாய்.

## கற்போம் கிரேக்கம் - 10

### கிரேக்க மொழியின் பத்தாம் எழுத்து

Kappa Κ, κ - கிரேக்க எழுத்துக்களின் பத்தாம் எழுத்து, இது ஆங்கில எழுத்து K, k க்கு ஈடானது.

**வார்த்தை**

Κύριος - Kurios - குரியோஸ் என்ற வார்த்தைக்கு கடவுள், ஆண்டவர், எஜமானர், ஐயா என்பது பொருளாகும். 700-க்கும் மேற்பட்ட நிகழ்வுகளுடன், கிரேக்க வார்த்தையான குரியோஸ் (கைரியோஸ்) இது முக்கியமாக "ஆண்டவர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. புதிய மொழிபெயர்ப்புச் சொற்களில் இந்த வார்த்தை குறிப்புகள் மற்றும் சூழல்களைப் பொறுத்து பல அர்த்தங்களுடன் பயன்படுத்தப்படுகிறது. சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே முழுமையான இறையாண்மையைக் கொண்டுள்ளார் என்று ஆதிகால கிறிஸ்தவர்கள் துணிச்சலாக அறிவித்தனர். அவமானம் மற்றும் தோல்வியின் சின்னமான அவரது சிலுவை மரணம், தெய்வீக வல்லமையின் அடையாளமாக மாற்றியமைக்கப்பட்டது. தம் மரணத்தின் வழியாக ஆளுமையின் அடையாளத்தை மாற்றினார் (1 கொரிந்தியர் 1:24). மரண பரியந்தம் கீழ்ப்படிந்ததன் மூலம், இயேசு உலக அதிகாரத்தால் வரையறுக்கப்படாத, மாறாக தன்னைத் தியாகம் செய்யும் அன்பு மற்றும் கடவுளின் சித்தத்திற்கு உண்மையுள்ள கீழ்ப்படிதலால் வரையறுக்கப்பட்ட ஒரு தலைமையை வெளிப்படுத்தினார்.

சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவின் அதிகாரத்தை உயிர்த்தெழுதல் உறுதிப்படுத்துகிறது் இது வாழ்வு, மரணம் மற்றும் பிரபஞ்சத்தின் மீதான அவரது ஆளுமையை மெய்ப்பிக்கிறது (ரோமர் 1:4). ஆதிகால கீர்த்தனைகள் (பிலிப்பியர் 2:6-11) இந்த வழித்தடத்தை விவரிக்கின்றன: மனுவுருவாதல், மரணம் வரை கீழ்ப்படிதல் மற்றும் தெய்வீக மேன்மைப்படுத்தல், அங்கே முழங்கால்கள் யாவும் அவருக்கு முன்பாக முடங்கும். ஹெலனிய உலகில் இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிடுவது பேரரசின் அதிகாரத்திற்கு எதிரான ஒரு புரட்சிகரமான சவாலாகவும், கடவுளின் இறுதியான ஆட்சியின் பிரபஞ்ச அறிவிப்பாகவும் இருந்தது. விசுவாசிகளைப் பொறுத்தவரை, சிலுவையில் அறையப்பட்டு உயர்த்தப்பட்ட கிறிஸ்து அனைத்து படைப்புகளின் மீதும் ஆட்சி செய்வதால், இந்தத் தலைமைத்துவம் விசுவாசம், தார்மீக மாற்றம் மற்றும் இறுதி கால நம்பிக்கைக்கு அழைப்பு விடுக்கிறது.

## இயேசு கிறிஸ்துவும் குரியோசின் பொருளும்

இந்தச் சொல்லின் தத்துவ மாற்றம் செப்துவஜின்ட் (LXX) வழியாக நிகழ்ந்தது. எபிரேய வேதாகமத்தின் கிரேக்க மொழிபெயர்ப்பில், YHWH என்ற தேவநாமம் Κύριος என மொழிபெயர்க்கப்பட்டது. இது சாதாரண மொழிபெயர்ப்பு அல்ல் மாறாக, கிரேக்கச் சொல்லுக்கு தனித்துவமான தெய்வீக அதிகாரத்தையும் பரிசுத்தத்தையும் அளித்த ஒரு விசுவாசச் செயல்.

ஆரம்பக் கிறிஸ்தவர்கள் இயேசுவை கூரியோஸ் என்று அழைத்தபோது, அவர்கள் சமூகவியல் சொற்றொடரை எடுத்துக் கொள்ளவில்லை மாறாக, இஸ்ரவேலின் தேவனுடைய தெய்வீக அடையாளத்திற்குள் இயேசுவைச் சேர்த்தனர். இதனால்தான், பழைய ஏற்பாட்டில் யாவே குறித்து சொல்லப்பட்ட வசனங்களை புதிய ஏற்பாடு நேரடியாக இயேசுவுக்குப் பயன்படுத்துகிறது.

## இயேசுவே ஆண்டவர் - சீசருக்கு எதிரான போராட்டம்

ரோமப் பேரரசு ஒரு அரசியல் அமைப்பாக மட்டுமல்ல் தெய்வீக - அரசியல் ஒழுங்காகவே தன்னை முன்வைத்தது. சீசர் Κύριος-Kurios (ஆண்டவர்) என்றும் Σωτήρ Soter (இரட்சகர்) என்றும் அறிவிக்கப்பட்டார். Pax Romana - ரோமிய சமாதானம் - சீசரின் ஆட்சியால் உலகிற்கு உறுதி செய்யப்படும் தெய்வீக நன்மை எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆகவே, சீசரின் ஆண்டவர் தன்மையை ஒப்புக்கொள்வது ஒரு மதச் செயல் மட்டுமல்ல. குடிமக்களின் கடமையாகவும் இருந்தது.

இந்தச் சூழலில், ஆரம்பக் கிறிஸ்தவ அறிக்கை இயேசுவே ஆண்டவர் என்பது நேரடியான தத்துவ - அரசியல் அறிவிப்பாக இருந்தது. அது அரசியல் அதிகாரத்தின் முழுமையையும் (absolute sovereignty) கேள்விக்குள்ளாக்கி, பேரரசின் இரட்சிப்பு வாதத்தை நிராகரித்தது. உண்மையான சமாதானமும் இரட்சிப்பும் ரோமின் வலிமையால் அல்ல, கிறிஸ்துவின் ஆண்டவர்தன்மையால் வருகிறது என அது சாட்சியமளித்தது.

இந்த எதிர்ப்பு ஆயுதப்போராட்டமாக அல்ல. தத்துவ எதிர்ப்பாக வெளிப்பட்டது. கிறிஸ்தவர்கள் வன்முறையால் பேரரசை சவாலிடவில்லை ஆனால் வழிபாடு, விசுவாச அறிக்கை, மற்றும் வாழ்வியல் சாட்சியத்தின் மூலம் அதிகாரத்தின் இறுதி மையம் சீசரில் அல்ல, கிறிஸ்துவில் தான் என்பதை உலகிற்கு அறிவித்தனர். இவ்வாறு, இயேசுவே ஆண்டவர் என்ற அறிக்கை, பேரரசு வாதத்திற்கு எதிரான அமைதியான ஆனால் ஆழமான புரட்சியாக அமைந்தது.

## ஆண்டவர் யார் ?

இயேசுவை "ஆண்டவர்" என்று அறிக்கையிடுவது வெறும் இறையியல் விருப்பமல்ல் அது ஒருவரின் முழு இறையாண்மையையும் அவரிடம் ஒப்படைக்கும் ஒரு தீவிரமான செயலாகும். மதம் மற்றும் அரசியல் பிணைக்கப்பட்டிருந்த அக்கால சூழலில், இயேசுவை எஜமானராக ஏற்றுக்கொள்வது என்பது சீசரின் (Emperor) அதிகாரத்தை மறைமுகமாக மறுப்பதாகும். இது ஒரு புதிய குடியுரிமை மாற்றத்தைப் போன்றது... கண்ணுக்குத் தெரிந்த ரோமானியப் பேரரசின் அதிகாரத்திலிருந்து விலகி, நீதியுள்ள கடவுளின் ராஜ்யத்திற்கு உட்படுவதாகும். இது உலகத்தின் நெறிமுறைகளைக் கைவிட்டு, கிறிஸ்துவின் நெறிமுறைகளைப் பின்பற்ற விசுவாசிகளைத் தூண்டியது.

இந்த அர்ப்பணிப்பு ஞானஸ்நானத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இது ஒரு போர்வீரன் தன் தளபதிக்குச் செய்யும் விசுவாசப் பிரமாணம் (sacramentum) போன்ற பொது அறிவிப்பாக இருந்தது. இதன் மூலம், விசுவாசிகள் தங்களின் பழைய ஆன்மீக மற்றும் அரசியல் எஜமானர்களைத் துறந்தனர். இத்தகைய பிரத்யேகமான விசுவாசம் பெரும் விலையைக் கோரியது: ரோமானியத் தொழில் சங்கங்கள் அல்லது பேரரசர் வழிபாடுகளில் பங்கேற்க மறுத்ததால், ஆரம்பகால கிறிஸ்தவர்கள் பொருளாதார இழப்பு, சமூகப் புறக்கணிப்பு மற்றும் துன்புறுத்தல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது.

இறுதியில், கிறிஸ்துவின் தலைமைத்துவம் அன்றாட வாழ்க்கையின் கட்டமைப்பையே மாற்றியமைத்தது. ஆதிக்கம் செலுத்தி ஆட்சி செய்த ரோமானியப் பிரபுக்களுக்கு மாறாக, கிறிஸ்துவின் அதிகாரம் சேவை மற்றும் சுய தியாகத்தால் வரையறுக்கப்பட்டது. இந்த முரண்பாடான அதிகாரம், அன்றைய சமூக அதிகார வர்க்கத்தையும் வெற்றியின் அளவுகோல்களையும் நிராகரிக்க விசுவாசிகளைத் தூண்டியது. இது சமூகப் படிநிலைகளைத் தகர்த்து, அச்சம் அல்லது அதிகார ஆசைக்குப் பதிலாக, கீழ்ப்படிதலுள்ள அன்பினால் வழிநடத்தப்படும் ஒரு புதிய சமூகத்தை உருவாக்கியது. ஆரம்பக் கிறிஸ்தவர்கள் சிலுவையில் அறையப்பட்டும் உயிர்த்தெழுந்தும் உள்ள இயேசுவே உண்மையான ஆண்டவர் என்று அறிவித்தார்கள். இந்த அறிக்கை சீசரின் அதிகாரத்தை சார்பற்றதாக மாற்றி, இறுதியான விசுவாசமும் கீழ்ப்படிதலும் கிறிஸ்துவுக்கே உரியது என்பதைத் தெளிவுபடுத்தியது (ரோமர் 10:9 1 கொரிந்தியர் 12:3).

கிறிஸ்துவின் ஆண்டவத்துவம் அதிகாரத்தின் பொருளையே மறுவிளக்குகிறது. சீசரின் ஆட்சி ஆதிக்கத்தின் மூலம் அமையும்போது, இயேசுவின் ஆண்டவத்துவம் தன்னைத் தாழ்த்திக் கொள்ளும் அன்பின் மூலம் வெளிப்படுகிறது. பிலிப்பியர் 2:6-11 கூறுவது போல, கிறிஸ்து தன்னை வெறுமையாக்கி, சிலுவை மரணத்திற்கு கீழ்ப்படிந்து, அதனால் எல்லோருக்கும் ஆண்டவராக உயர்த்தப்பட்டார். இதன் மூலம் வலுக்கட்டாயத்தில் அல்ல, தியாகமும் சேவையும் கொண்ட ராஜ்யமே தேவனுடைய ராஜ்யம் என்பதை அவர் வெளிப்படுத்துகிறார்.

ஒவ்வொரு காலத்திலும் இயேசுவே ஆண்டவர்... என்ற அறிக்கை, மனித வாழ்வின் மீது அதிகாரம் செலுத்த முனையும் போட்டி ஆண்டவர்களை எதிர்கொள்கிறது. இன்று இவ்வகை ஆண்டவர்கள் பேரரசர்களாக அல்ல, சிந்தனைக் கோட்பாடுகள், பொருளாதாரம், தேசியவாதம், சுயநலம் ஆகிய வடிவங்களில் தோன்றுகின்றன. இயேசுவை ஆண்டவராக அறிக்கையிடுதல் என்பது வெறும் சொல்லாட்சி அல்ல் அது வாழ்வின் முழுமையான ஒப்படைப்பு மற்றும் ஒழுக்கப்பூர்வமான உறுதி ஆகும். கிறிஸ்துவின் நீதியும், தாழ்மையும், அன்பும் ஆட்சி செய்யும் வாழ்க்கைக்குள் நம்மை அழைக்கும் இந்த அறிக்கை, சீசரின் காலத்திலிருந்து இன்றுவரை திருச்சபையைத் தொடர்ந்து கேள்விக்குள்ளாக்குகிறது: உங்கள் வாழ்க்கையின் உண்மையான ஆண்டவர் யார்?

**வசனம்**

ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்.
அப்போஸ்தலர் 2 : 36 .

கிறிஸ்துவின் சேவையில்
அருட்திரு. ராஜ் குமார் ஜான் வெஸ்லி
ஆயர், தமிழ் திருச்சபை, ஃபுஜைரா



## வேதத்தில் பெண்கள்-11

### பெண்கள்: தத்துவ விளக்கிகளாக - Women as Theological Interpreters

வேதாகமத்தைப் பற்றிய பெண்களின் பார்வை அவசியமானது, ஏனெனில் அது தேவ சாயலை (Imago Dei) முழுமையாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. ஆணும் பெண்ணும் தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்டிருப்பதால், ஆண்கள் மட்டுமே விளக்கம் அளிக்கும்போது வேதாகமத்தில் உள்ள தேவனுடைய பராமரிப்பு, உயிர் கொடுத்தல் மற்றும் காக்கும் தாய்மைப் பண்புகள் பெரும்பாலும் கவனிக்கப்படாமல் போகின்றன. பெண்களின் குரலை மையப்படுத்துவதன் மூலம், சபை தனது "ஆன்மீகக் குருட்டுப் புள்ளிகளை" நீக்கி, யூனியா மற்றும் பெபேயாள் போன்ற முக்கிய பெண் தலைவர்களின் வரலாற்றை மீட்டெடுக்கிறது. இது உயிர்த்தெழுதலின் "முதல் சாட்சிகளான" பெண்களை வரலாற்றின் ஓரத்திற்குத் தள்ளாமல், விசுவாசத்தின் மையத்திற்கு கொண்டு வருகிறது.

மேலும், பெண்களின் பார்வயானது வேதாகமத்திற்கு ஒரு வாழ்வியல் தத்துவத்தை (Theology of Lived Experience) வழங்குகிறது, குறிப்பாக வேதனையையும் ஒடுக்குமுறையையும் விவரிக்கும் கதைகளை விளக்குவதற்கு இது மிகவும் அவசியம். பராமரிப்பு, சகிப்புத்தன்மை மற்றும் சமூக அநீதி போன்ற அனுபவங்களின் வழியாக பெண்கள் வேதத்தை அணுகும்போது, அது வெறும் சட்டப் புத்தகமாக இல்லாமல், விடுதலை மற்றும் ஆற்றுப்படுத்துதலின் ஆவணமாக மாறுகிறது. பெண்கள் வேதத்திற்குப் பொருள் கூறும்போது, அவர்கள் வரலாற்று ரீதியான மொழிபெயர்ப்புத் தவறுகளைச் சரிசெய்கிறார்கள் அத்தோடு, சமூகம் யாரை மௌனமாக்க முயன்றதோ அவர்கள் மூலமே தேவன் தனது புரட்சிகரமான பணிகளைச் செய்கிறார் என்கிற வேதாகம உண்மையை நிலைநாட்டுகிறார்கள்.

### குரலை மீட்டெடுத்தல் - பெண்மையியல் தத்துவத்திற்கான ஒரு அறிமுகம்

பெண்கள் பெரும்பாலும் ஆன்மீக உரையாடல்களின் ஓரத்தில் வைக்கப்பட்டே பழகிப்போயிருக்கிறார்கள். அநேக நேரங்களில், அவர்கள் ஒரு கருவியாகவோ, போதனை பெறுபவர்களாகவோ அல்லது திருத்தப்பட வேண்டியவர்களாகவோ மட்டுமே பார்க்கப்படுகிறார்கள். இந்த நிலைப்பாடு ஒரு ஆன்மீக வெற்றிடத்தை உருவாக்குகிறது அங்கே பெண்களுக்கே உரித்தான ஆழமான புரிதல்கள், நிறுவனக் கட்டுப்பாடுகளால் மௌனமாக்கப்படுகின்றன. இருப்பினும், வேதாகமத்தை நாம் ஆழமாக வாசித்தால், ஒரு உண்மையை அறியலாம்: பெண்கள் வெறும் பார்வையாளர்கள் அல்ல, அவர்கள் தேவனைப் பெயரிட்டு அழைப்பவர்களாகவும், நம்பிக்கையைச் சொற்களாக்குபவர்களாகவும், தங்கள் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து தேவச் செயல்களை விளக்கும் முதன்மை "தத்துவ விளக்கிகளாகவும்" (Theological Interpreters) இருக்கிறார்கள்.

சபையிலோ அல்லது குடும்பத்திலோ பல ஆண்டுகளாகத் தங்கள் குரல் கேட்கப்படாமல் தவித்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு, இந்த மாற்றம் ஒரு மிகப்பெரிய விடுதலையாக அமையும். பல பெண்கள் வேதனை, பராமரிப்பு மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றின் வழியே ஒரு ஆழமான ஆன்மீக ஞானத்தைச் சுமந்து செல்கிறார்கள். இந்த அனுபவங்களே ஒரு "வேத பாடமாக" அமைகிறது. ஒரு பெண் "கேள்வி கேட்காமல் கீழ்ப்படி மட்டும்" என்று சொல்லப்படும்போது, அவளது ஆன்மீக வளர்ச்சி முடக்கப்படுகிறது. எனவே, மேய்ப்பர் பணி என்பது பெண்களுக்கு என்ன நினைக்க வேண்டும் என்று கற்றுக்கொடுப்பதல்ல் மாறாக, தேவன் ஏற்கனவே அவர்கள் மூலமாக எப்படிப் பேசியிருக்கிறார் என்பதை அங்கீகரிப்பதில் இருந்தே தொடங்குகிறது. பெண்களைத் தத்துவ விளக்கிகளாகப் பார்ப்பது என்பது அவர்களை "சரிசெய்வதிலிருந்து" அவர்களை "உற்று கவனிப்பதாக" மாறுகிறது. அதிகாரத்தில் இருப்பவர்கள் கவனிக்கத் தவறும் தேவனின் குணாதிசயங்களை, ஒடுக்கப்பட்ட நிலையில் இருக்கும் பெண்கள் தெளிவாகக் காண்கிறார்கள் என்பதை இது உணர்த்துகிறது.

இறையியலில் பெண்களின் குரலை மீட்டெடுப்பது என்பது ஏதோ ஒரு நவீனக் கருத்தை இணைப்பது அல்ல. மாறாக, பெண்களின் சாட்சியங்களே தேவனின் விடுதலைப் பணிக்கான அடித்தளம் என்ற வேதாகம உண்மைக்குத் திரும்புவதாகும்.

### மிரியாம் முதல் மரியா வரை - வேத அடிப்படையிலான விளக்கங்கள்

தேவனுடைய மக்களின் வரலாறு, சட்டங்களோ அல்லது கோட்பாடுகளோ உருவாவதற்கு முன்பே, தேவச் செயல்களை விளக்கிய பெண்களால் நிறைந்தது. யாத்திராகமத்தில் மிரியாம் இதற்குச் சிறந்த உதாரணம். சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பே, மிரியாம் செங்கடல் விடுதலையை ஒரு பாடலாக விளக்கினாள். நிறுவனப் பதிவுகள் விடுதலையின் வழிமுறைகளில் கவனம் செலுத்தும்போது, மிரியாமின் தத்துவம் "விடுதலை மற்றும் நினைவுகூருதல்" பற்றியதாக இருந்தது. தத்துவம் என்பது வெறும் கருத்துக்கள் மட்டுமல்ல் அது பாடப்படலாம், ஆடப்படலாம் மற்றும் உணரப்படலாம் என்பதை அவள் சமூகத்திற்குக் கற்பித்தாள். நிர்வாகத்திலும் சடங்குகளிலும் உலகம் மூழ்கியிருக்கும்போது, தேவனுடைய செயல்களைப் பெண்கள் எப்படி நினைவில் வைத்திருக்கிறார்கள் என்பதற்கு அவள் ஒரு முன்மாதிரி.

அதேபோல், சாமுவேலின் புஸ்தகத்தில் வரும் அன்னாவின் கதை, "புலம்பல் தத்துவத்திற்கான" ஒரு வரைபடத்தை வழங்குகிறது. அன்னாவின் ஜெபம் அழகான சொற்களால் அலங்கரிக்கப்படவில்லை அது கசப்பும் கண்ணீரும் கலந்த ஓர் உண்மை நிலை. ஏலி ஆசாரியர் அவளது ஆன்மீகப் போராட்டத்தைத் தவறாகப் புரிந்துகொண்டு அவள் மது அருந்தியிருப்பதாகக் கருதினார். இது, ஒரு மேய்ப்பர், பெண்களின் ஆழமான ஆன்மீக வேதனையை "ஒழுங்கற்றது" எனத் தவறாகக் கருதுவதைக் காட்டுகிறது. ஆனால் அன்னாவின் துதிப்பாடல் (1 சாமுவேல் 2) ஒரு மிகப்பெரிய அரசியல் தத்துவமாக மாறியது. அது வறியவர்களை உயர்த்தி, பலவான்களைத் தாழ்த்தும் தேவனின் குணாதிசயத்தை விளக்கியது. அவளது அந்த விளக்கம், பின்னாளில் புதிய ஏற்பாட்டின் மரியாளின் "மக்னிபிகத்" பாடலுக்கு அடிப்படையாக அமைந்தது.

இயேசுவின் தாயாகிய மரியாள் லூக்கா சுவிசேஷத்தில் பாடும்போது, அவள் ஒரு மென்மையானப் பெண்ணாக மட்டும் பாடவில்லை. அவள் ஒரு புரட்சிகரமான தத்துவ விளக்கத்தை அளிக்கிறாள். தேவன் அதிகார அமைப்புகளைக் கவிழ்ப்பவர் என்றும், தாழ்ந்தவர்களை உயர்த்துபவர் என்றும் அவள் பிரகடனம் செய்கிறாள். தனது கர்ப்பத்தைத் தனது தனிப்பட்ட விஷயமாகப் பார்க்காமல், ஒட்டுமொத்த உலகிற்குமான ஒரு மாற்றமாக அவள் விளக்குகிறாள். மிரியாம், அன்னா மற்றும் மரியாள் ஆகியோரின் ஊடாக நாம் காண்பது என்னவென்றால், பெண்கள் எப்போதும் தேவனின் புரட்சிகரமான நோக்கங்களைப் பெயரிட்டு அழைப்பவர்களாகவும், தனிப்பட்ட வலிக்கும் பொதுவான நம்பிக்கைக்குமான பாலமாகத் திகழ்ந்தார்கள் என்பதுதான், மற்றும் தாங்குதல்கள் வழியாக. ஒரு பெண் விசுவாசத்தோடு ஒரு நெருக்கடியைக் கடக்கும்போதோ அல்லது ஒரு அநீதியான அமைப்பைக் கேள்வி கேட்கும்போதோ, அவள் தேவனின் தன்மையைப் பற்றிப் பேசுகிறாள். மேய்ப்பர்களும் பராமரிப்பாளர்களும் அறிவுரை வழங்க முற்படும் முன், அந்தப் பெண்ணின் வாழ்க்கையில் ஏற்கனவே வெளிப்பட்டிருக்கும் தத்துவத்தைக் கண்டறியக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இன்று சபையில் அமர்ந்திருக்கும் ஒவ்வொரு பெண்ணுக்கும் சொல்ல வேண்டிய செய்தி இதுதான்: உங்கள் ஆன்மீகப் புரிதல் மதிப்புமிக்கது, உங்கள் கேள்விகள் பரிசுத்தமானவை. சபை ஒரு குணமாக்கும் இடமாக இருக்க வேண்டுமானால், ஒரு பெண்ணின் வாழ்க்கை அனுபவம் என்பது "தேவன் வெளிப்படும் தலம்" என்பதை அங்கீகரிக்க வேண்டும். ஒரு பெண்ணின் குரல் புறக்கணிக்கப்படும்போது, தேவனுடைய சாயலின் ஒரு பகுதி அந்தச் சமூகத்திலிருந்து மறைக்கப்படுகிறது. எனவே, பராமரிப்பாளர்களின் பணி என்பது பெண்கள் தாங்களாகவே தேவனைப் பெயரிட்டு அழைக்கவும், பாடவும் அவர்களுக்குத் துணிச்சலைத் தருவதாகும். மௌனம் மற்றும் நிராகரிப்பால் ஏற்பட்ட ஆழமான காயங்களைக் குணப்படுத்துவதே இன்றைய காலத்தின் தேவையாகும்.

முடிவாக, பெண்களின் தத்துவ விளக்கம் என்பது ஒரு முழுமையான மற்றும் உண்மையான விசுவாசத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. மிரியாமின் பாடல்களையும், அன்னாவின் புலம்பல்களையும், மரியாளின் பிரகடனங்களையும் நாம் மதிக்கும்போது, தேவன் பற்றிய ஒரு மேன்மையான, விடுதலையளிக்கும் புரிதலைப் பெறுகிறோம். மௌனமாக்கப்பட்ட குரல்கள் அனைத்தும், தங்களைக் கேட்கிற, நினைக்கிற, விடுவிக்கிற தேவனைப் போற்றும் தைரியத்தைப் பெற நாம் தொடர்ந்து பணியாற்றுவோம்.

கிறிஸ்துவின் சேவையில்
திருமதி பாலின் எமிமா
ஆயரம்மா, தமிழ் திருச்சபை, ஃபுஜைரா

# இராஸ் அல் கைமா போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இராஸ் அல் கைமா திருச்சபையின் சார்பில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

அன்பானவர்களே! புத்தாண்டு என்பது நமது வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்குவதற்கு ஆண்டவர் நமக்கு தந்திருக்கிற வாய்ப்பாகும். இப்புத்தாண்டில் நம்மில் பலர் பல எதிர்பார்ப்புகளை எதிர்நோக்கியிருக்கலாம். புதிய இலக்குகளை நாம் நிர்ணயிப்பதுண்டு. புதிய தீர்மானங்களை எடுப்பதுண்டு. தோல்வியிலிருந்து எப்படி வெற்றிப் பயணத்தை மேற்கொள்ளலாம் என ஆண்டவரிடத்தில் காத்திருக்கலாம். இப்படி பல காரியங்களைக் குறித்து, நாம் புத்தாண்டைக் குறித்து எண்ணிக் கொண்டிருக்கும் வேளையில் ஆண்டவருடைய திட்டம் என்ன என்பதை ஏசாயா 30:18 வசனத்தின் படி அறிந்து கொள்வோம்.

கிறிஸ்துவுக்கு முன் எட்டாம் நூற்றாண்டில் யூதா தேசம் வலிமைமிக்க அசீரியாவின் மூலம் கடுமையான அச்சுறுத்தலை சந்தித்தது. இந்தச் சூழலில் ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தருடைய வழிநடத்துதலில் நம்பியிருக்கவேண்டும் என யூதாவை எச்சரித்தார். ஆனால் யூதாவின் தலைவர்கள் தங்கள் சுயஞானத்தில் நம்பிக்கை கொண்டது மட்டுமல்ல அசீரியாவை முறியடிக்க எகிப்தின் பார்வோனிடத்தில் உதவி கேட்கும் நிலைக்கு சென்று (ஏசாயா 30:2) கர்த்தரின் கோபத்திற்கு உள்ளாயினர். ஆனாலும் கர்த்தர் ஏசாயா 30:18 வசனத்தின் படி தன்னுடைய ஜனங்களுக்கு தான் யார் என்பதையும், தன்னுடைய இரக்கம் எப்படிப்பட்டது என்பதையும் அறிந்து கொள்வோம்.

### 1. காத்திருக்கும் தேவன்:-

“ஆனாலும் உங்களுக்கு இறங்கும்படி கர்த்தர் காத்திருப்பார்,” கர்த்தர் தம்மை நமக்காகக் காத்திருக்கும் ஆண்டவராக வெளிப்படுத்துகிறார். இந்த வசனத்தில் “காத்திருப்பார்” சொல் கர்த்தர் வெறுமையாக நேரத்தைக் கடத்துகிறவராக அல்ல, மாறாக மிகுந்த ஆர்வத்துடனும், பொறுமையுடனும் ஒரு செயலைச் செய்வதற்காகக் காலம் தாழ்த்திக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது.

கர்த்தர் எதற்காகக் காத்திருக்கிறார் என்று கேள்வி எழும்போது தன்னைத் தேடாமல் எகிப்தை நாடி மறுபடியும் அடிமைத்தனத்தின் வாழ்வுக்குச் சென்ற மக்களைத் தண்டிக்க நினையாமல் தன்னுடைய பெருந்தன்மையை வெளிப்படுத்தி அவர்களுக்கு இரக்கம் செய்வதற்காகக் காத்திருந்தார். கர்த்தருடைய இரக்கம் என்பது ஒரு தாயின் உன்னத அன்பை வெளிப்படுத்துவதற்கு சமமாக இருக்கும். லூக்கா 15:11-32 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள இளைய குமாரன் உவமையில் தந்தை, திரும்பி வந்த இளையகுமாரனை வரவேற்பதில் இருந்து காத்திருப்பும், இரக்கமும் வெளிப்படுவதை அறிந்து கொள்ளலாம். கர்த்தரிடத்தில் நாம் திரும்புவோம் என காத்திருந்து தம்முடைய இரக்கத்தை வெளிப்படுத்த ஆயத்தமாயிருக்கிறார். நாம் இழந்தவற்றை அவர் திரும்பத் தருவதற்கு காத்திருக்கிறார்.

### 2. செயல்படும் தேவன்:-

“உங்கள் மேல் மனதுருகும் படி எழுந்திருப்பார்”

எகிப்துக்குப் போகாமல் தம்முடைய முகத்தைத் தேடிவரும் ஜனங்களுக்கு அவர் செயல்படும் தேவனாக, மனதுருகி எழுந்து நிற்கும் தேவனாயிருப்பார். “உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்” இவ்விடத்தில் கர்த்தர் ஒரு செயலைச் செய்ய முழு வல்லமையோடு ஆவலாயிருக்கிறார் என்றும், மனதுருகுவது என்பது பரிதாபமாக அல்ல, அவர் நமக்கு உதவிசெய்ய நம் கண்ணீரைத் துடைக்க நமக்கு விடுதலையைத் தர முழு தீர்மானத்துடன் செயல்பட நிற்கிறார் என்பதை எடுத்துரைக்கிறது. மேலும் மக்களுக்கு உங்களுடைய போராட்டங்கள் போதும் நான் செயல்படப் போகிறேன் என்பதையும் கர்த்தர் வெளிப்படுத்துகிறார். இளையகுமாரன் உவமையில் தந்தை செயல்படுத்த தொடங்கிய போது அவருடைய மனதுருக்கம் மகனை மீண்டும் தன்பக்கம் சேர்த்துக்கொண்டது. அதுபோல கர்த்தர் நம்முடைய நுகத்திலிருந்து நமக்கு விடுதலையருள எழுந்து செயல்படுவார்.

### 3. நீதி செய்யும் தேவன்:-

“அவர் நீதி செய்கிற தேவன்” என்ற வார்த்தை ஒரு சமூகத்தில் நியாயம் நிலைநாட்டப்படுவதையும், ஒழுங்கைக் கொண்டுவருதல் என்ற ஆழமான பொருளை உள்ளடக்கியது. கர்த்தருடைய நியாய தீர்ப்பு என்பது நம் வாழ்வில் நாம் சந்தித்த அநீதிகளை அவர் சரி செய்து நமது வாழ்வில் சமநிலையை கொண்டுவருவதாகும்.

இந்த நியாயம் நாம் மகிழ்ந்திருக்கும்படி செய்து, நம்முடைய கண்ணீருக்குப் பதிலாக மகிழ்ச்சியையும், அநீதிக்குப் பதிலாக நீதியையும் அளிக்கிறார். அவர் நீதி செய்ய காத்திருக்கும்போது நமக்கு எதிராக வருகிறவர்களுக்கும், நம்முடைய சூழ்நிலைகளுக்கும் அவர் நியாயமான தீர்ப்பு தந்து நமக்கு நிம்மதியையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் தந்தருள்வார்.

### 4. ஆசீர்வதிக்கும் தேவன்:-

“அவருக்குக் காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்.” இந்த வார்த்தையின் மூலமாக கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பதற்காகக் காத்திருக்கிறார். இந்த ஆசீர்வாதம் வெளிப்புறமான ஆசீர்வாதத்தினால் வருவதல்ல. தேவனுடைய கிருபையினால் வருவதாகும். இதன் வழியாக பாதுகாப்பு மற்றும் உள்ளார்ந்த மகிழ்ச்சி கிடைக்கும். கர்த்தருக்காகக் காத்திருப்பது என்பது நமக்குத் தேவையானதை அவரிடமிருந்து பெற்றுக் கொள்வதுமட்டுமல்ல அவர் யாராயிருக்கிறாரோ அதையே நம்புவதாகும். அந்த நம்பிக்கை நமக்கு நிலையான மகிழ்ச்சியைத் தரக்கூடியது. இதைத்தான் யூதா நாட்டு மக்களிடத்தில் கர்த்தர் எதிர்பார்த்த காரியமாகும். அன்பானவர்களே, நம்முடைய ஆண்டவர் நமக்காக காத்திருக்கிறவராக, செயல்படுகிறவராக, நீதி செய்கிறவராக மற்றும் நம்மை ஆசீர்வதிக்கிறவராக நிற்கிறார். இப்புதிய ஆண்டில் இதை உணர்ந்து கர்த்தரைச் சார்ந்து வாழ்ந்து தேவாசீர்வாதம் பெறுவோம். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. D.ஜோசப்
ஆயர், இராஸ் அல் கைமா.

## NEW MEMBERS

| No | Name | Mem. No. | Area |
|---|---|---|---|
| 1 | Mr. Madanraj | 3156 | Dubai |
| 2 | Mr. Suthan Savarimuthu | 3157 | Dubai |
| 3 | Mr. S. Dinoj | 3158 | Dubai |

# ஆயரம்மா மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை கூறிக்கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இப்புதிய ஆண்டிலும் கர்த்தர் நம்மை அவருடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும், நன்மையினாலும் வழிநடத்திக் காப்பாராக. வாழ்வின் பிரச்சனைகளை சந்தித்து தேவனுடைய வழி நடத்துதல் மூலமாக மீண்டு வந்த வேதாகமப் பெண்களின் வரிசையில் நாகமானின் மனைவியைக் குறித்து இம்மாதத்தில் நாம் அறிந்து கொள்ளக் கர்த்தர் உதவி செய்வாராக.

**நாகமானின் மனைவி:- 2 இராஜாக்கள் 5: 1-3**

சீரிய நாட்டின் படைத்தலைவனாகிய நாகமான் தன்னுடைய அரசனிடத்தில் செல்வாக்கு மிகுந்தவனாயிருந்தான். மேலும் சீரிய தேசத்திற்கு அவன் மூலமாய் கர்த்தர் மீட்பைக் கொடுத்திருந்தார். இந்தச் சூழ்நிலையில் வலிமை வாய்ந்தவனான நாகமான் குஷ்டரோகத்தால் பாதிக்கப் பட்டவனானான். வேத அறிஞர்கள் சிலர் நாகமான் தோல் குஷ்ட ரோகத்தினால் பாதிக்கப்பட்டிருந்ததாக கூறுகின்றனர். இஸ்ரவேலர்கள் குஷ்டரோகிகளை அருவருப்பானவர்களாகவும், அவர்களைத் தனிமைப்படுத்தி வாழ்விடத்திலிருந்து புறம்பான இடங்களில் தங்கச் செய்தனர். ஆனால் சீரியா தேசத்தில் இப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் இல்லாததால் அவன் அவனுக்குரிய மாளிகையிலேயே வசித்து வந்தான். இருந்தபோதிலும் இந்த நோயின் தீவிரத்தை அவனது மனைவி உணர்ந்திருந்தாள். தன்னுடைய கணவர் அதிகாரமுடையவராக இருந்தாலும் அவருடைய நோயின் தாக்கம் நாகமானின் மனைவிக்கு பெரிய வாழ்க்கைப் பிரச்சனையாக இருந்திருக்கும். இந்த சூழ்நிலையில் தனக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சனையை எப்படி மேற்கொண்டாள் என்பதை அறிந்து நாமும் அதன்படி செயல்பட கர்த்தர் உதவி செய்வாராக.

**அலட்சியம் பண்ணாதவர்:-**

நாகமானின் மனைவியினிடத்தில் இஸ்ரவேலில் உள்ள தீர்க்கதரிசியை அறிமுகப்படுத்தியவர் இவரைப்போன்று பெயர் சொல்லப்படாத ஒரு சிறு பெண் ஆவார். இதில் நாம் கவனிக்க வேண்டியது நாகமானின் மனைவியின் சிறந்த பண்பாகும். அதாவது தனக்கு செய்தி கொண்டு வந்தவள் ஒரு பக்கத்தில் வேற்று நாடு அல்லது எதிர் நாட்டை சார்ந்தவர்.

மற்றொரு பக்கம் தனது வீட்டின் பணிப்பெண். இந்தச் சூழ்நிலையிலும் நாகமானின் மனைவி அந்த சிறு பெண்ணையும் அவளுடைய வார்த்தையையும் அலட்சியம் பண்ணாமல் அதை ஏற்றுக் கொண்டு அந்த வார்த்தையின்படி தொடர்ந்து செய்தியை நாகமானிடத்தில் கொண்டு சென்ற போது அவளுடைய வாழ்வில் பிரச்சனைக்கு தீர்வு கிடைத்தது.

**தைரியமானவள்:-**

இஸ்ரவேலைச் சார்ந்த நாடுகடத்தப்பட்டு அடிமையாக்கப்பட்டுப் பணிப் பெண்ணாக வந்த சிறுபெண் தன்னுடைய தேசத்திலுள்ள தன் ஆண்டவருடைய தீர்க்கதரிசியினிடத்தில் நாகமான் சென்றால் குஷ்டரோகம் குணமடையும் என்று கூறுகிறாள் இதைக் கேட்டவுடன் எதிர்நாட்டைக் குறித்து தனது கணவரின் எண்ணம் எப்படியிருக்கும் என்று அறியாதவளாய், பயமில்லாமல் தைரியமாய் சமாரியா தேசத்து சிறுபெண் சொன்ன செய்தியை நாகமானிடத்தில் கொண்டு சென்றதால் அவருடைய பிரச்சனைக்கு முடிவு எட்டப்பட்டது.

**கர்த்தர் மீது நம்பிக்கை கொண்டவள்:-**

சீரியர்கள் பொதுவாக பல தெய்வங்கள் மீது நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தனர் அசூர், ஆதாத், இஷ்தார்,ஷமாஷ், சின் ஆகிய தெய்வங்களை முக்கியமாக வழிபட்டனர். இவைகள் அனைத்தும் இயற்கையைச் சார்ந்த தெய்வங்களாக இருந்தனர். இப்படிப் பல தெய்வங்களை வழிபடுகிறச் சூழ்நிலையில் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மீது நம்பிக்கை கொண்டு, நாகமான் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மாத்திரம் தொழுதுகொள்ளும்படியாகச்செய்தாள்.

நாகமானின் மனைவி மற்றவர்களால் அறியப்படாத நிலையிலிருந்தாலும், பிரச்சனைகள் மிகுந்து எதிர்காலமே கேள்வியோடு நின்று கொண்டிருந்தாள். ஆனால் கர்த்தரை நம்பிய போது பிரச்சனைகளிலிருந்து அவளை கர்த்தர் விடுபடச் செய்தார். கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! நம்முடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட பிரச்சனைகள், சோர்வுகள் வந்தாலும் தைரியமாய் அதை எதிர்கொண்டு கர்த்தர் நமக்கு பிரச்சனைகளிலிருந்து விடுபட உதவி செய்வார் என்று அவர் மீது நம்பிக்கையாயிருக்கும்போது நமக்கு இருக்கிற எல்லா பிரச்சினைகளிலும் கர்த்தர் விடுதலை தருவார்.

திருமதி. P. அன்பு வனிதா ஜோசப்
ஆயரம்மா - இராஸ் அல் கைமா.

# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

இம்மட்டும் நம்மை சுகபெலத்துடன் பாதுகாத்து - நன்மைகள் ஒன்றும் குறைவுபடாமல் - அளவில்லாமல் தந்து காத்து நடத்தி வரும் தேவனைத் துதிக்கிறேன். வருடத்தின் துவக்க முதல் முடிவு மட்டும் கூடவே இருந்து, நாம் கூடி ஆராதிக்க - திருச்சபையாய் - தேவாதி தேவனைப் போற்றி தொழுது கொள்ள கர்த்தர் பாராட்டி வந்த தயவுகளுக்காக தேவனைத் துதிக்கிறேன். ஒவ்வொரு மாதங்களிலும் நம்முடைய வேண்டுதல்களை கிருபையாக கேட்டார். திருச்சபையாக நாம் தாங்கும் அனைத்து பணிகளையும் - மிஷனரி ஊழியங்களையும் ஆத்தும பாரத்தோடு தாங்கிட கர்த்தர் பாராட்டிய கிருபைகளுக்காக கர்த்தரை நன்றியோடு துதிக்கிறேன். நமக்கு முன்பாக இருக்கின்ற புதிய 2026-ம் ஆண்டிற்காக கர்த்தரைத் துதிக்கிறேன். பற்பல விதங்களில் பாதுகாவலராயிருந்து, பரம ஒளியாயிருந்து, பரன் இயேசுவையே நோக்கி பரிசுத்தமாய் தொடர்ந்து முன்னே செல்ல பரிசுத்த ஆவியானவரின் அருள் தந்து நடத்திட ஜெபிக்கிறேன். அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள், அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப் பார்த்து அவரைத் துதியுங்கள்.

கடந்த டிசம்பர் மாதம் நடை பெற்ற ஒவ்வொரு ஆராதனைகளும் வெகுசிறப்பாக நடைபெற கர்த்தர் கிருபை பாராட்டினார். முதலாம் தேதி அதிகாலை 5:30 மணிக்கு திருவிருந்து ஆராதனையும், வெள்ளிக் கிழமைகளில் ஆலயத்தில் மாலை 7:00 மணிக்கு ஆராதனைகளும், சனிக்கிழமைகளில் மாலை 7:00 மணிக்கு Jebel Ali ஆலய ஆராதனைகளும், விசேஷமாக 20-ம் தேதி அன்று பாடல் ஆராதனையும் நடைபெற்றது. அன்று தனியாக, குழுவாக, குடும்பங்களாக, Prayer Cell ஆக சிறப்பு பாடல்கள் பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். பாடல்கள் பாடிய ஒவ்வொருவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் St. Paul's Hall-ல் காலை 7:00 மணிக்கு ஆராதனையும், அதைத் தொடர்ந்து Junior Church காலை 10:30 மணிவரை நடைபெற்றது. மேலும் Cornerstone, Youth Fellowship, Womens Fellowship, Mens Fellowship, தமிழ் வகுப்புகள், முகாம் சந்திப்பு ஊழியங்கள், Fasting Prayer யாவும் வழக்கம் போல நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். யாவுக்காகவும் கர்த்தருக்கு மகிமையை செலுத்துகிறேன்.

கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியோடு டிசம்பர் முதலாம் தேதி மாலை 7:00 மணிக்கு Christmas Carol Service, St Paul's Hall-ல் நடைபெற்றது. Junior Choir, Church Choir குழுவினர்கள் வெகுசிறப்பாக Carols பாடல்கள் பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். 7-ம் தேதி ஞாயிறு அன்று காலை ஆராதனைக்குப் பின்பு Womens Fellowship சார்பாக Christmas Bazar வெகு சிறப்பாக நடைபெற்றது. மேலும் 7-ம் தேதி ஞாயிறு மாலை 5:00 மணிக்கு Habitat School, Al Tallah, Ajman-ல் வைத்து Christmas Tree Function வெகுசிறப்பாக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார்.

25-ம் தேதி வியாழன் அதிகாலையில் 4:00 மணிக்கும் மேலும் காலை 8:30 மணிக்கும் திருவிருந்து ஆராதனையுடன் கிறிஸ்துமஸ் பண்டிகை ஆராதனையும், 31-ம் தேதி புதன் அன்று நடு இரவு 11:30மணிக்கும், 1-ம் தேதி காலை 9:00 மணிக்கும் புதிய வருட பண்டிகை ஆராதனை திருவிருந்து ஆராதனையுடன் சிறப்பாக நடைபெற கர்த்தர் கிருபை பாராட்டினார். பண்டிகை கால நிகழ்வுகள், ஆராதனைகள் யாவும் கர்த்தருடைய ஆசீர்வாதத்தால் வெகு சிறப்பாக நடைபெற கர்த்தர் கிருபை பாராட்டினார். கர்த்தருக்கே மகிமை செலுத்துகிறேன்.

ஆத்தும பாரத்தோடும் ஜெபத்தோடும் திருச்சபையாக நாம் தாங்கி வருகின்ற 100 மிஷனரிமார்களுக்காக அவர்கள் சார்ந்துள்ள மிஷனரி சங்க பொருப்பாளர்கள், சந்திக்கப்பட்ட விசுவாசிகளுக்காகவும், தொடர்ந்து ஜெபிப்போம். மேலும் 15 ஊழிய ஸ்தாபனங்களுக்கு பொருளாதார உதவிகள் செய்யவும், பற்பல சரீர குறைபாடுள்ள சிறுவர்களுக்காக நமது சபை மூலம் உதவிபெறும் ஊழியங்களுக்காகவும், பாரத்தோடு ஜெபிப்போம். கொளகூர் மிஷனரி மருத்துவமனையில் மருத்துவர்களாக தியாகத்தோடும், அதிக கரிசனையோடும் மருத்துவ பணி செய்து வரும் Dr. Melchis மற்றும் Dr. Mrs. Daphni அவர்களுக்காகவும், சிகிச்சை பெற கடந்துவரும் மக்களுக்காகவும் அனுதினமும் ஜெபிப்போம். கிறிஸ்துவின் அன்பினால் அவர்கள் சந்திக்கப்பட, விசுவாசத்தில் வளர தவறாது ஜெபிப்போம்.

CDA மூலமாக Place of Worship Licence மற்றும் Bank A/c open செய்யும் காரியமாக அதிவிரைவில் அனுமதி கிடைக்கவும், அதற்காக எடுத்துவரும் முயற்சிகள் கர்த்தர் அருளால் வெற்றி பெறவும் ஜெபிப்போம். இடைவிடாது ஜெபிப்போம். ஊக்கத்தோடு ஜெபிப்போம்.

2026-ம் ஆண்டு நமது சபையின் அனைத்து ஆராதனைகளும், ஊழியங்களும் ஆசீர்வாதமாக அமைய ஜெபிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஜெபமே ஜெயம். ஜெபமே ஜீவன். Glory be to God Almighty.

Moses Vijaya Kumar,
Secretary.

# நீங்கள் கிறிஸ்தவரா...

"அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக் கடவர்கள்,
அவரது நாமம் மாத்திரம் உயர்ந்தது, அவருடைய
மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது." சங்கீதம் 143:13

அல்பாவும்
ஆதித்தனுமாகிய
இயேசுவே,
பரிபூரணரே, பரிசுத்தரே
பரமும் உமதே!
பாரெல்லாம் உமதே!
மெய்பொருளானவரே
மறைநாயகரே
மூவுலகும் காப்பவரே
மனிதரை
கருவாய்... உருவாய்...
உலகிலே
உருவாக்கியவரே!
அதர்மம் அழித்தே
தர்மம் நிலைக்கவே
அவதரித்தவரே!!
"அவரே தேவனால்
நமக்கு ஞானமும்
நீதியும், பரிசுத்தமும்
மீட்புமானார்."
1கொரி. 1:31
ஆயிரம் பக்தர்களின்
நடுவில் இருக்கும்
"பசுவின் கன்று"
தன் தாயினை
எவ்விதம் அடைகிறதோ
அவ்விதமே...
ஆண்டவர் இயேசுவால்
ஆத்மஞானம் பெற்ற
அந்த பயனற்ற
பற்றற்ற ஞானியை
எந்த மூலையில்
இருந்தாலுமே...
இயேசு கிறிஸ்து
அறிந்து கொள்வார்.
அழிவற்ற பரத்தில்
சேர்த்துக் கொள்வார்.
சர்வ உலகின்
சர்வ ஜீவராசிகளே
உயரங்களின்
உயரத்தில்
உள்ளவர்களே!
உன்னதத்திலே
உலா வருவோரே!
நீவிர் யாராயினும்
நெஞ்சம் முழுதும்
நினைவில் வாழ்வதும்
காணும் காட்சியில்
எங்கும் கர்த்தரே!!!
அன்புடையோரே!
மனதை மாசுபடுத்தும்
மாற்று விகாரம்
மனதுள் எழாமல்
மாயையில் விழாமல்
நற்கதி தரும்
நாதர் கிறிஸ்துவையே
நாள்தோரும் துதித்து
நாவாற போற்றுவோமே!
வான மாகிலும்
பூமி யாகிலும்
பிரளய காலமாகிலும்
கர்த்தரின் மகிமையே
அழிவில்லாதது...
காக்கும்
கருணையே
கர்த்தர் இயேசு
வெயிலென்றால்
நிழலாக
மழையென்றால்
குடையாக
துயர் துடைக்கும்
தாயாக
தாங்கி சுமக்கும்
தகப்பனாக
இவ்விதமாக...
துயர் துடைக்கும்
தூயவரே
நம் பிதாவாகிய இயேசு.
அன்பானோரே...
இந்த இனிய
புத்தாண்டில்
இயேசுவை
பணிந்து
வசனத்துக்கு
கீழ்படிந்து
இல்லாதோரின்
இல்லம் சென்று
உதவுங்கள்
தனவான்களே
தாராளமாய்
தானம் கொடுங்கள்
"ஏழைக்கு
இரங்குகிறவன்
கர்த்தருக்கு
கடன்கொடுக்கிறான்"
ஏழையின் மனமகிழ்வில்
இயேசுவின்
வரம்பெற்று
மகிழ்வுடன்
வாழுங்கள்
நலமே வருக!
நாளெல்லாம் வருக!
என வாழ்த்தி
இனிய புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

"அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." மத்தேயு 18:19

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும் சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும் மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

